අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/01/12/14/02/10
ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }
දිනය / திகதி / Date } 2019.02.25

சுற்றறிக்கை இலக்கம் :- **05/2019**

மாகாணப் பிரதம செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலைகளினதும் அதிபர்கள்,

**ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் கொடுப்பனவின் நிகழ்நிலை (Online) வேலைத்திட்டம்**

இலவசக் கல்வியின் ஆரம்பத்துடன் 05 ஆம் தரப் புலமைப்பரிசில் உதவித் திட்டம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் கற்றல் திறமைகளைக் காண்பிக்கும் பிள்ளைகள் உரிய கல்விப் பருவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பாடசாலை முறைமையிலிருந்து இடைவிலகலைத் தடுத்தல் மற்றும் திறமைமிக்க மாணவர்களுக்கு வசதிகள் கொண்ட பாடசாலைகளை வழங்குவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டது. 05 ஆம் தரப் புலமைப்பரிசில் கொடுப்பனவு தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2006/27, 2006/27(1), 2007/04, 2007/4(1) மற்றும். 2014/28 கொண்ட சுற்றறிக்கைகளின் ஆலோசனைகளுக்கு மேலதிகமாக இச் சுற்றறிக்கையின் ஆலோசனை அமுலில் இருக்கும்.

02. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவ மாணவியர்களுக்கு புலமைப்பரிசில் உதவி நிதி உரிய நேரத்திற்குக் கிடைப்பது அத்தியாவசியம் என்பதினால் புலமைப்பரிசில் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது இடம்பெறக்கூடிய தாமதங்களை கட்டுப்படுத்துவதற்காக நிகழ்நிலை வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. இதன்போது புலமைப்பரிசில் உரிமை கிடைக்கப்பெற்ற 6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரையில் கல்விபயிலும் சகல மாணவ மாணவியர்களினதும் அடிப்படைத் தகவல்களின் ஒன்லைன் புள்ளிவிபர முறைமையினை முன்னெடுப்பதுடன், அவ்வவ் பாடசாலைகளில் அதிபர்களினால் தமது பாடசாலையில் கல்விபயிலும் மாணவ மாணவியர்களின் தகவல்கள் ஒன்லைன் தகவல் முறைமை ஊடாக பாடசாலையின் தகவல் முறைமையில் இணைக்கப்பட வேண்டும்.

04. அவ்வாறு பாடசாலை தகவல் முறைமைக்கு இணைக்கும் மாணவரின் வங்கிக் கணக்குப் புத்தகத்தில் வங்கிக் கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், வங்கிக் கிளை மற்றும் குறியீட்டு இலக்கத்தை பாடசாலை மூலம் உள்ளடக்க வேண்டும். வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலை மூலம் பூரணப்படுத்தப்பட்ட மாணவர் தகவல் முறைமையின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தி கொடுப்பனவுச் செயற்பாடுகளுக்காக உரிய வங்கிக் கிளைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன்போது சகல வலயங்களினதும்/ பாடசாலைகளினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்/ அதிபருக்கு பயன்பாட்டுப் பெயர் (User Name) மற்றும் கடவுச் சொல் (Password) மற்றும் ஆலோசனைத் தொடர் (இணைப்பு 01) வழங்கப்படுவதுடன், மாணவர் மாணவியர்களின் தகவல்களின் உண்மைத் தன்மை மற்றும் இரகசியத் தன்மையினை பாதுகாப்பது வலயக் கல்விப் பணிப்பாளர்/ அதிபரின் பொறுப்பாகும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

05. பாடசாலைகள் மூலம் சகல மாதங்களிலும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை தகவல் முறைமையினைச் சமகாலப்படுத்த வேண்டும். சகல மாதங்களிலும் 27 ஆம் திகதியன்று மாணவர்களின் கணக்குக்கு நிதியினை அனுப்புவதற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்க வலயக் கல்வி அலுவலகங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ் ஒன்லைன் வேலைத்திட்டத்தை பதிவிறக்கம் (download) மாணவர் தகவல்கள் (Student Information) ஆவணம் அல்லது வசதியான முறையில் தயாரிக்கப்பட்ட பாடசாலையின் புலமைப்பரிசில் உரிமைபெறும் மொத்த மாணவர்களின் மாதிரி ஒப்பதுடன் கோவை பாடசாலை மூலம் வருடாந்தம் பேணப்பட வேண்டும்.

06. 5 ஆம் தரப் புலமைப்பரிசில் உரித்தாகும் மாணவர் வேறு பாடசாலைக்குச் சேர்வதற்காக கல்வி பயிலும் பாடசாலையிலிருந்து விலகும் பட்சத்தில் உரிய மாதத்தின் 01 ஆம் திகதி கல்வி பயிலும் பாடசாலையில் புலமைப்பரிசில் உதவிக் கொடுப்பனவினை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கொடுப்பனவுகள் மேற்கொண்டு முடிவடைந்ததன் பின்னர் அம்மாதத்தின் 28 ஆம் திகதியளவில் உரிய புலமைப்பரிசில்தாரரின் தகவல்களை ஒன்லைன் முறைமையில் இணைக்க வேண்டியதுடன் புதிய பாடசாலைக்குச் சேர்க்கப்பட்டதன் பின்னர் எழும் மாதம் தொடக்கம் கொடுப்பனவுகளுக்காக புதிய பாடசாலை மூலம் மாணவரை இப்பாடசாலையின் தகவல் முறைமையில் உள்ளடக்க வேண்டும்.

07. இவ் வேலைத்திட்டம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ் ஆலோசனைகளுக்கமைய 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் ஒன்லைன் வேலைத்திட்டத்தின் ஊடாக தேசிய பாடசாலைகளில் மாத்திரம் புலமைப்பரிசில் உதவிக் கொடுப்பனவுகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**பத்மசிறி ஜயமான்ன**
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள் :-**


01. கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
02. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
03. செயலாளர், நிதி ஆணைக்குழு
04. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
05. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம்

### 5 ஆம் தரப் புலமைப் பரிசில்தாரர்களுக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவிற்காக தயாரிக்கப்பட்ட ஒன்லைன் வேலைத்திட்டம்
### (Online System) புள்ளிவிபரங்களை உள்ளடக்குவதற்கான ஆலோசனைப் படிவம்

6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரை கல்வி பயிலும் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் தாரர்களுக்காக உரிமை கிடைக்கப் பெற்ற சகல மாணவ மாணவிகளினதும் அடிப்படைத் தகவல்கள் கல்வி அமைச்சினால் ஒன்லைன் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(01.)

- ஒன்லைன் தகவல் முறையிலுள்ள மாணவரை பாடசாலை தகவல் முறைமையில் இணைத்தல்.
- Attached student to school from pool. (STUDENT INFO)





❖ அவ்வவ் பாடசாலைகள் மூலம் தமது பாடசாலையில் கல்விபயிலும் மாணவ மாணவிகள் ஒன்லைன் புள்ளிவிபர முறைமை மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றவும்.

1. பக்க மெனு (side menu) "student pool" click செய்யவும்.
2. மாணவரின் பெயர் அல்லது பரீட்சை இலக்கம் search box இன் மீது குறிப்பிட்டு enter செய்யவும்.
3. "Add to school" button இனை click செய்யவும்.
4. பொருத்தமானவாறு மாணவர் / மாணவி கல்விபயிலும் தரத்தை மாற்றவும்.
5. தகவல்கள் save செய்வதற்காக "Add to school" button இற்கு click செய்யவும்.

(02.)

- மாணவர் கணக்குத் தகவல்களை உள்ளடக்குதல் / சமகாலப்படுத்தல்
- Update Student Bank Account Details. (STUDENT INFO)





❖ மாணவர்களின் வங்கிக் கணக்கு இலக்கத்தைச் சமகாலப்படுத்தல்

1. பரீட்சை இலக்கம் அல்லது பெயரைப் பயன்படுத்தி மாணவரைத் தேர்ந்தெடுத்தல்.
2. மாணவரின் பெயர் அல்லது பரீட்சை இலக்கத்தை search box மீது குறிப்பிட்டு enter செய்யவும்.
3. "update" button இன் click செய்யவும்.
4. வங்கியின் பெயரை தேர்ந்தெடுக்கவும்.
5. வங்கிக் கிளையை தேர்ந்தெடுக்கவும்.
6. வங்கிக் கணக்கு இலக்கத்தை உள்ளடக்கவும்.
7. தகவல்களை save மேற்கொள்வதற்காக "update" button இல் click செய்யவும்.

(03.)

➢ மாணவரின் தற்காலிக/ நிரந்தர பாடசாலை தகவல்களை முறைமையிலிருந்து அகற்றுதல்.
➢ Student Deactivation. (If absence or other reason) (STUDENT INFO)





❖ விசேட காரணங்களுக்கமைய மாணவரின் தகவல்களை செயழிலக்கச் செய்தல் இதன்போது இடம்பெறும்.

- பக்க மெனு (side menu) இல் "student pool" click செய்யவும்.
- மாணவரின் இலக்கம் அல்லது பெயரைப் பயன்படுத்தி மாணவரை தேர்தெடுக்கவும்.
- மாணவரின் பெயர் அல்லது பரீட்சை இலக்கத்தை search box மீது குறிப்பிட்டு enter செய்யவும்.
- "update" button இல் click செய்யவும்.
- "temporary Deactivate" அல்லது "Permanently Deactivate" தேர்ந்தெடுக்கவும்.
- தகவல்கள் save மேற்கொள்வதற்காக "update" button இனை click செய்யவும்.

(04.)

- மாணவரைப் புதிய பாடசாலையில் சேர்த்தல்
- Student Transfers to other school (STUDENT INFO)




❖ மாணவர்களை வேறு பாடசாலைக்கு இடமாற்றல்

- பக்க மெனு (Side menu) இல் "Student info" click செய்யவும்.
- பரீட்சை இலக்கம் அல்லது பெயரைப் பயன்படுத்தி மாணவரைத் தேர்ந்தெடுத்தல்.
- மாணவரின் பெயர் அல்லது பரீட்சை இலக்கத்தை search box மீது குறிப்பிட்டு enter செய்யவும்.
- "update" button இனை click செய்யவும்.
- "Return to pool" இனை தேர்ந்தெடுக்கவும்.
- தகவல்கள் "update" button இற்காக click செய்யவும். அவ்வேளையில் மாணவர் தகவல்களை மீள பிரதான தகவல் முறைமைக்கு உட்படுத்தப்படும்.